**மோட்டார் வாகன விபத்து வழக்குகள், மாவட்ட சிறப்பு தீர்ப்பாயம், காஞ்சிபுரம்**
**காஞ்சிபுரம்**

| வழக்கு எண் | MCOP | 835 | of | 2016 |
|---|---|---|---|---|

2026-ம் ஆண்டு ஜீலை திங்கள் 22-ம் நாளான இன்று

**மனுதாரர்** தரப்பில் 1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1873-ம் ஆண்டின் 10-வது சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு. B.Prabu, Assistant என்பவரால் சட்டத்தின் படி பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயா் | திருமதி.கோமலா | கிராமம் | |
| கணவர் பெயா் | திரு.சொக்கலிங்கம் (லேட்) | வட்டம் | காஞ்சிபுரம் |
| வயது | 63 | மாவட்டம் | காஞ்சிபுரம் |

**நாள் 22.07.2026 – ம.சா–1**

**முதல் விசாரணை: (மனுதாரர் தரப்பில்)**

நான் இந்த வழக்கில் 2வது மனுதாரர் ஆவேன், நான் எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை எனக்காகவும் 1 மற்றும் 3 மனுதாரர்களுக்காகவும் சேர்த்து நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| வ. எண். | தேதி | ஆவணங்கள் விவரம் | ஆவணத்தின் குறியீடு எண். | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| 1. | 02.03.2016 | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ–1 | நகல் |
| 2. | – | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | ம.சா.ஆ–2 | நகல் |
| 3. | 02.03.2016 | சடலக் கூறு ஆய்வறிக்கை | ம.சா.ஆ–3 | நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | 16.03.2016 | இறப்புச் சான்றிதழ் | ம.சா.ஆ–4 | அசல் |
| 5. | 15.04.2016 | வாரிசுச் சான்றிதழ் | ம.சா.ஆ–5 | நகல் |
| 6. | – | விபத்தில் இறந்துபோன லட்சுமணன் என்பவருடைய டிரைவிங் லைசன்ஸ் | ம.சா.ஆ–6 | நகல் |
| 7. | 09.02.2016 | விபத்தில் இறந்துபோன லட்சுமணன் என்பவருடைய பணி உத்தரவு | ம.சா.ஆ–7 | நகல் |
| 8. | – | 1 மற்றும் 2 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை | ம.சா.ஆ–8 | நகல் |

**மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.**

**(1 முதல் 3 மற்றும் 5 முதல் 8 வரையிலான ஆவணங்கள் 3வது எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை (3வது எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகன் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு போனார் என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு பதிவு புத்தகம் இல்லை என்றால் சரிதான். என் மகன் ஓட்டிய வாகனத்திற்கு இன்சூரன்ஸ் கிடையாது என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் என் மகன் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், முதல் தகவல் அறிக்கையின் படி என் மகன் சம்பவ நேரத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்று தான் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ நேரத்தில் எதிரே வந்து விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்துடைய ஓட்டுநர் யார் என தெரியுமா என்றால் தெரியாது. எதிரே வந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதை காட்டக் கூடிய ஆவணத்தை தாக்கல் செய்தள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அவருடைய பெயர் வேதாச்சலம். மேற்படி வேதாச்சலம் என்பவர் தான் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால்

தெரியாது. என்னுடைய மனுவின் படி 1வது எதிர்மனுதாரர் தான் எதிரே வந்த வாகனத்தின் முதல் உரிமையாளர் என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாரரிடமிருந்து இந்த 3வது எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை வாங்கிவிட்டார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த விபத்து சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வழக்கின் எதிரியான இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள 2வது எதிர்மனுதாரர் விடுதலை ஆகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தில் இறந்துபோன என் மகனின் மனைவியான 1வது மனுதாரர் தற்போது 2வதாக மற்றொரு நபரை திருமணம் செய்துகொண்டு தனது கணவரோடு வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். இந்த மனுவில் உள்ள 3வது மனுதாரர் விபத்தில் இறந்துபோன லட்சுமணன் என்பவருடைய தங்கை என்றும், அவர் திருமணமாகி தனது கணவர் வீட்டில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். நான் என்னுடைய மற்றொரு மகனான உமாபதி என்பவருடைய பராமரிப்பில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். என் மகன் ம.சா.ஆ-7-ன் படி தற்காலிக பணியாளர் என்றும், வருடத்தில் 3 மாதங்கள் மட்டும் தான் பணி இருக்கும் என்று சொன்னால் சரிதான். என் மகனுடைய வருமானத்தை காட்டக் கூடிய வகையில் வருமானச் சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1வது எதிர்மனுதாரர் சம்பந்தம் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகளை இந்த வழக்கில் எதிர்மனுதார்களாக சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் எங்களுக்கு ஏதேனும் இழப்பீடு கிடைக்கக் கூடியது என்றால் அதனை இறந்துபோன 1வது எதிர்மனுதுாரரரோ அல்லது அவரது வாரிசுதாரர்கள் தான் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகப்படியான இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரிதான். 3வது எதிர்மனுதாரர் இந்த வழக்கில் அவசியமற்ற தரப்பினர் என்றும், அதனால் 3வது எதிர்மனுதாரரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

PANDIARAJ Digitally signed by PANDIARAJ Date: 2026.08.02 16:09:05 +0530